ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2082/39 - 2018 අගෝස්තු මස 01 වැනි බදාදා - 2018.08.01
*2082/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்*

வட மாகாண மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டத்திற்கு வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இ. வரதீஸ்வரன்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வட மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ9 வீதி,
கைதடி,
2018, யூலை 27.

**வட மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் இலக்கம் 1 இனுடைய விடயம் 17 இன் உப பிரிவுகள் 17.3 மற்றும் 17.4 ஆகியவற்றின் பிரகாரம் வட மாகாணத்தில் கூட்டுறவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தொடர்புறும் சட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அதனுடன் இணைந்த விடயங்களுக்கான நியதிகளை உருவாக்குவதற்கும் வட மாகாண மாகாண சபையின் கீழான கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவைத் தாபித்து நிறுவும் நியதிச் சட்டம்.*

இந்நியதிச் சட்டமானது 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டம் மற்றும் 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, திருத்தச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்திலிருந்து மாறுபட்டதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாணத்தின் மாகாண சபையால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டமானது வட மாகாண மாகாண சபையினுடைய 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் எனக் குறிப்பிடப்படும் என்பதோடு வட மாகாண ஆளுநர் இதற்குச் சம்மதம் அளிக்கும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கும் அதிகாரம்.

2. வர்த்தமானியில் கட்டளை ஒன்றைப் பிரசுரிப்பதன் ஊடாக அமைச்சர் இதன்கீழ் வரும் நியதிச் சட்ட ஏற்பாடுகளிலிருந்து பின்வரும் சங்கங்களை விலக்களிக்கலாம் :

(அ) அதனகத்து குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட யாதாயினும் கூட்டுறவுச் சங்க வகுதிகள் ; அல்லது

(ஆ) குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட யாதாயினும் கூட்டுறவுச் சங்கங்கள்.

இது தொடர்பில் கீழ்வரும் நியதிச் சட்ட ஏற்பாடுகளில் "கூட்டுறவுச் சங்கம்" என்று விளிக்கப்படுவதனை குறித்த காலப்பகுதியில் அமுலில் உள்ள மேற்படி கட்டளைக்குள் உள்ளடங்காத கூட்டுறவுச் சங்கம் ஒன்று என வாசித்து அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

பகுதி I

## வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவை ஸ்தாபித்தலும் அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும்

கூட்டுறவு ஆணைக்குழுவை ஸ்தாபித்தல்.

3. இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்காக " வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு" என அழைக்கப்படும் அதிகாரம் கொண்ட அமைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

ஆணைக்குழுவின் சேர்வுகள்.

4. (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ் ஆணைக்குழு அமைக்கப்படும்.

(2) இந்த ஆணைக்குழு வட மாகாண சபையின் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படும் மூவரைக் கொண்டதாக அமையும்.

(3) எவரேனும் ஒருவர் பின்வரும் வகைப்பாட்டினுள் அடங்குபவராயின், அவர் இப்பதவிக்குத் தகைமையற்றவராகக் கருதப்படுவார். அவர்,

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளராக/முன்னாள் பணியாளராக ; அல்லது

(ஆ) அமைச்சரின் கருத்துப்படி கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம், ஊதியம் ; அல்லது சேவையை அடிப்படையாகக் கொண்டு நிபந்தனைகளை அமைக்கும் குறிக்கோளுடன் நடத்தப்படும் தொழிற்சங்க அங்கத்தவராக இருக்கும் ஒருவராக ; அல்லது

(இ) கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிப்பவர் அல்லது வகித்தவர் ஒருவராக ; அல்லது

(ஈ) தற்சமயம் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபையின் உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி மன்றத்தில் பதவி வகிக்கும் உறுப்பினர் ஒருவராக ; அல்லது

(உ) கூட்டுறவுச் சங்கத்தில் மற்றும் கூட்டுறவு ஊழியர்களின் இன்னமும் முற்றுப்பெறாத சட்ட நடவடிக்கை தொடர்பாக முன்னிலையாகிய ; அல்லது முன்னிலையாகும் சட்டப் பிரதிநிதியாக அல்லது ஒழுக்கத்தைப் பரிசீலிக்கும் அதிகாரியாக ; அல்லது மேன்முறையீட்டைப் பரிசீலிக்கும் அதிகாரி ஒருவராக ; அல்லது

(ஊ) கூட்டுறவு விடயம் தொடர்பான அமைச்சில் அல்லது ; திணைக்களத்தின் தற்போது பதவியில் இருக்கும் ஊழியர் ஒருவராக இருந்தால்.

5. ஆணைக்குழு, கூட்டிணைந்த குழுவாக பொதுவான முத்திரையுடனும் இடையறா வழியுரிமையுடனும் வழக்குத் தொடுக்கக்கூடியதாகவும் அதன் மீது எவரேனுமாள் வழக்குத் தொடுக்கக்கூடியதாகவும் நியதிச் சட்டத்தினூடாகச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் நிறுவுகை.

6. (1) ஒவ்வொரு ஆணைக்குழு உறுப்பினரும் நியமித்த நாளிலிருந்து மூன்று வருடங்கள் பதவி வகிப்பார். எனினும், பின்வரும் நிலைமைகளில் பதவி வெற்றிடமாகும் :- உறுப்பினர்களது பதவிக் காலம்.

(அ) ஒரு உறுப்பினர் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக எழுத்து மூலமாக அமைச்சருக்கு அறிவித்தால் அல்லது அமைச்சரினால் நியாயமான காரணங்களுக்காக அவர் பதவி விலக்கப்படின் ;

(ஆ) பிரிவு 4 (3) இன்கீழ் உறுப்பினர் குறித்த பதவிக்குத் தகைமையற்றவராகக் காணப்படின்.

மேலும், எவரேனும் ஒரு உறுப்பினர் பதவி விலகினால் அல்லது இறந்து போனால் அல்லது அமைச்சரால் முன்னர் பதவி விலக்கப்பட்டிருந்தால் அல்லது மேலே கூறப்பட்ட 4(3) இன்கீழ் வெற்றிடம் ஏற்பட்டால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான உரிமை அமைச்சருக்கு உண்டு. அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் தாமாக முற்கூட்டியே பதவி விலகினாலொழிய, ஆணைக்குழுவின் அத்தகைய வெற்றிடமேற்படுத்திய உறுப்பினரின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்திற்கு மட்டும் பதவி வகிக்கக்கூடியவராவார்.

(2) ஒரு பதவிக் காலத்திற்கு ஆணைக்குழு உறுப்பினராகக் கடமையாற்றிய ஒருவர் மேலும் ஒரு பதவிக் காலத்திற்கு அமைச்சரின் தீர்மானப்படி நியமிக்கப்படலாம். எனினும், இரண்டு பதவிக் காலங்களிற்கு மட்டுப்படுத்தப்படும்.

7. (1) அமைச்சர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை அதன் தலைவராக நியமிக்க வேண்டும். அவ்விதம் நியமிக்கப்படும் தலைவர் எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவர் ஆணைக்குழுக் கூட்டங்களில் தலைமை வகிக்க வேண்டும். தலைவர் சமுகமளிக்காதவிடத்து, சமுகமளித்தவர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர் தலைமை ஏற்கலாம். தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் பணிகள்.

(2) ஆணைக்குழுக் கூட்டத்திற்கு இரு உறுப்பினர்கள் சமுகமளித்தல் நிறைவெண்ணாக அமையும்.

(3) இரு உறுப்பினர்கள் மட்டும் சமுகமளிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாத வேளையில் அவ்விடயத்தை ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் சமுகமளிக்கும் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் சமுகமளிக்கும் கூட்டத்தில் ஏதாவது ஒரு விடயத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்தில் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு காணப்படின் பெரும்பான்மையின் கருத்துக்கேற்ப தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

(5) இந்த நியதிச் சட்டத்தில் அல்லது அதனடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கட்டளையில் ஏற்பாடுகள் விதிக்கப்படாத விடயம் தொடர்பாக ஆணைக்குழு அதன் நடைமுறையை நெறிப்படுத்தலாம்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் பதவி வெற்றிடங்கள் இருப்பதால் அல்லது நியமிப்பது தொடர்பான குறைபாடு காரணமாக அல்லது அக்காரணங்களால் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்கள் அல்லது விதிக்கப்படும் உத்தரவுகள் மற்றும் எந்தவொரு நிபந்தனையும் வலுவற்றது ஆகாதிருத்தல் வேண்டும்.

8. ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான ஊக்குவிப்பு மற்றும் கொடுப்பனவுகளை நிதி விடயங்களுக்குப் பொறுப்பான மாகாண அமைச்சரின் ஆலோசனையுடன் கூட்டுறவு அமைச்சர் நிர்ணயிப்பார். உறுப்பினர்களது கொடுப்பனவு.

9. (1) ஆணைக்குழுவின் செயலாளர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்கள்.

(2) ஆணைக்குழு அலுவலகத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் மாகாண பொதுச்சேவையின் இடம் மாற்றத்தகு பதவிகளிலிருந்து நியமிக்கப்பட வேண்டும்.

ஆணைக்குழு உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும் சத்தியப்பிரமாணம் செய்தல்.

10. (1) ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்களது பணியை ஆரம்பிக்க முன்னர் இந்நியதிச் சட்டத்தின் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ள படிவம் (அ) இன்படி சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள வேண்டும் ; அல்லது உறுதியளிக்க வேண்டும்.

(2) செயலாளர் மற்றும் ஊழியர் குழாமின் ஏனைய அதிகாரிகள் அவர்களது முதல் நியமனத்தின்போது ஆணைக்குழுவின் தலைவர் முன்னிலையில் இந்நியதிச் சட்டத்தின் அட்டவணையில் உள்ள படிவம் (ஆ) இன்படி சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள வேண்டும் ; அல்லது உறுதியளிக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் அதிகாரங்கள்.

11. (1) ஆணைக்குழுவுக்குப் பின்வரும் அதிகாரங்கள் இருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனைத்து ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளுதல் மற்றும் மேம்படுத்துவதற்கான தொழில் நிபந்தனைகள் மற்றும் அடிப்படையான கொள்கை உள்ளடக்கப்பட்ட காரியக் கிரமங்களை நிர்ணயித்தல் ;

(ஆ) தேவையான நேரத்தில் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அவ்வாறான பரீட்சை நடாத்தப்படும் சபைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் அவ்வாறான பரீட்சைக் கட்டணங்களை நிர்ணயித்தல் ;

(இ) ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் கூட்டுறவுச் சங்கத்தில் எந்தவொரு பதவிக்கும் நியமனம் செய்வதற்கு இருக்க வேண்டிய தகுதிகளை நிர்ணயித்தல், எந்தவொரு வகுப்பு/ தரத்தின் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயித்தல், காலத்திற்குக் காலம் அவ்வாறு நிர்ணயித்து சம்பளத்தைத் திருத்தத்திற்கு உட்படுத்துதல் போன்ற விடயங்கள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல் ;

(ஈ) ஆணைக்குழு நிர்ணயித்த சம்பள அளவுத்திட்டத்தின்படி சம்பளம் வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆணையிடல் ;

(உ) கூட்டுறவுச் சங்கங்களால் தனது ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் ஒழுக்காற்று நடவடிக்கையின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை நிர்ணயித்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களை நிர்ணயித்தல் மற்றும் நிர்ணயித்த காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கையை நடாத்தி முடிக்குமாறு சங்கங்களுக்கு அறிவிப்புகளை விடுத்தல் ;

(ஊ) எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் தனது ஊழியர் பற்றி எம்மாதிரியான அறிக்கைகளை வைத்திருக்க வேண்டும் என்பதை நிர்ணயித்தல் ;

(எ) ஆணைக்குழுவிற்கு ஊழியர்களைப் பற்றித் தேவைப்படும் கடிதக் கோவைகள் வேறு ஆவணங்கள் மற்றும் விபர அறிக்கைகள் குறிப்பிட்ட தினத்திற்கு முன் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கும்படி அல்லது வழங்கும்படி எந்தவொரு சங்கத்திற்கும் ஆணையிடல் ;

(ஏ) ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாகத் தேவையான விசாரணை பரிந்துரையுடன் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு மேன்முறையீட்டு விசாரணை அதிகாரியை அல்லது அதிகாரிகளுடனான சபையை நியமித்தல் ;

(ஐ) கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியரின் செயற்பாடுகள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை இடம்பெற்று அவ் ஊழியரினால் அந்தச் சங்கம் வழங்கிய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்துள்ளவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டைக் கவனத்தில் கொண்டு அத்தகைய ஊழியரை மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்வது உள்ளடங்கலான ஆணைக்குழு வழங்கும் கட்டளைகளை குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் ஏற்று நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆணையிடல் ;

(ஒ) தமது சேவையிலிருந்து பதவி முடிவுறுத்தப்பட்ட பணியாளர்களுக்கு உரிய பணிக்கொடை அல்லது வேறு உபகாரக் கொடுப்பனவுகளை ஊழியருக்கு வழங்குவது தொடர்பாக கொள்கைகளை வகுத்தல் ;

(ஓ) ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது ஒரு வகுப்பிலான கூட்டுறவுச் சங்கங்களை விடுவிப்பது தொடர்பாக ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஔ) மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின் அமைச்சரால் விதிக்கப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவற்றின் ஊழியர்களுக்கும் வழங்கக்கூடிய வேறு தத்துவங்களை நடைமுறைப்படுத்துதல்.

(2) மேலே உப பிரிவு 1 இல் குறிப்பிடப்படும் ஆணைக்குழுவின் தத்துவங்களை அமுலாக்கும்போது ஆணைக்குழு மூலம் எடுக்கும் ஏதேனும் தீர்மானங்களை அல்லது அதன் ஒரு பகுதியை உரிய காண்புகளின் அடிப்படையில் மாற்றுவதற்கு, திருத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

நிதி ஏற்பாடு.

12. ஆணைக்குழுவின் செலவுகளுக்கான நிதியை மாகாண சபை வருடாந்த நிதி ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## பகுதி II

### கூட்டுறவுச் சங்கங்களும் அதன் ஊழியர்களும்

கூட்டுறவுச் சங்கம் தொழில் தருநராகக் கருதப்பட வேண்டும்.

13. ஒரு ஊழியருக்கு சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகளைத் தனது நிதியிலிருந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் வழங்குமாயின் அச்சங்கம் அந்த ஊழியரின் தொழில்தருநராக கருதப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் ஊழியர்கள் ஆணைக்குழுவின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

14. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், அல்லது அச்சங்கத்தின் எந்தவொரு ஊழியரும் இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் அதிகாரத்தை நிறைவேற்றுவதில் அல்லது நடைமுறைப்படுத்துவதில் விடுக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் மற்றும் பிரிவு 11 உப பிரிவு 2 இன் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுக்கப்படும் உத்தரவுகளும் இறுதியானவையும் முடிவானவையாகவும் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், பிரிவு 2 இன் பிரகாரம் விலக்களிப்புப் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவற்றின் ஊழியர்களுக்கும் இது ஏற்புடையதல்ல.

ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு ஊழியர்கள் கட்டுப்பட வேண்டும்.

15. ஏதாவது ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவால் விடுக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் பிரிவு 11 உப பிரிவு (2) இன் நிபந்தனைகளின் அடிப்படையில் நிறைவுபெற வேண்டும். அவ் உத்தரவு சங்கத்தினால் விடுக்கப்பட்டது போல அவ் ஊழியர் கட்டுப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

வதிவிடம் பற்றிய தகுதிகள்.

16. கூட்டுறவுச் சங்கத்தில் எந்தவொரு பதவியில் சேர்த்துக்கொள்வதற்கும் அவர் சங்கம் அமைந்துள்ள மாவட்டத்தில் நிரந்தரமாக 2 வருடமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அத்ததைகய விண்ணப்பதாரி இல்லாதவிடத்து வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து தகுதியானவர் ஒருவரை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நிரந்தரமாக நியமிப்பதற்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தின் தரத்தின்படி ஊழியர்களின் தரங்கள் மற்றும் வகுப்புகளின்படி ஊழியர்களின் சம்பள அளவுத் திட்டத்தினை நிர்ணயிக்கும்.

17. ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு பதவியில் நியமிக்கப்படும் எவருக்கும் அந்தப் பதவிக்கான சம்பள அளவுத் திட்டத்திற்குரிய வேதனத்தை வழங்க வேண்டும். அது பிரிவு 25(1) இல் குறிப்பிட்டிருப்பது போல சங்கத்தின் தரத்தின்படி நிர்ணயிக்கப்படும் ஊழியர் தரத்திற்கும் வகுப்பிற்கும் ஏற்றது போல் தீர்மானிக்கப்பட வேண்டும்.

18. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிதியத்திலிருந்து அச்சங்கத்தின் ஊழியர்களது சம்பளங்களையும் மற்றும் வேறு கொடுப்பனவுகளையும் செலுத்த வேண்டும்.

ஊழியர்களை இடம் மாற்றல்.

19. (1) கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு தனது வேலைத்தளம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவரை தனக்குச் சொந்தமான பிறிதொரு வேலைத்தளம் ஒன்றுக்கு இடமாற்றும் அதிகாரம் உண்டு. குறித்த இடமாற்றமானது ஒழுக்காற்று நடவடிக்கையின்பாற்பட்டதாக இருந்தாலன்றி அவ்விடமாற்றமானது அப்பணியாளரின் சம்பளத்தில் பாதிப்பினை ஏற்படுத்தலாகாது.

(2) வேலை கொள்வோரான இரு சங்கங்களின் முன்னரேயே பெறப்பட்ட சம்மதத்துடன் குறித்த சங்கங்களில் ஒத்த நிரந்தரப் பதவிகளில் பணியாற்றும், ஒத்து இடமாற்றலுக்கு கோரிக்கை சமர்ப்பித்த இரு ஊழியர்களை இடமாற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு.

(3) வேலை கொள்வோரான இரு சங்களின் முன்னரேயே பெறப்பட்ட சம்மதத்துடன் அவற்றில் ஒரு சங்கம் ஒன்றில் நிரந்தரப் பதவியில் பணியாற்றும், இடமாற்றலுக்கு கோரிக்கை சமர்ப்பித்த ஊழியர் ஒருவரை ஒத்த பதவியில் மற்றைய சங்கத்திற்கு இடமாற்றும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு.

கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் தண்டனை வழங்குதல்.

20. கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு அல்லது வேறு வகையில் தண்டனை வழங்குவதாயின் இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்டதாகக் கருதும் நிபந்தனைகளின்படி செய்யப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கான பிணை வைப்பு மற்றும் வட்டி வழங்கல்.

21. (1) கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆணைக்குழு ஏற்படுத்துகின்ற பிணைப் பணத்தொகைக்கு விஞ்சிய தொகை ஒன்றை பிணை வைப்பாகச் செலுத்தும்படி ஊழியர் ஒருவர் கேட்கப்படலாகாது.

(2) ஊழியர் ஒருவரால் பிணை வைப்பாகச் செலுத்தப்படும் பணத்தைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தனது பெயரில் வங்கியொன்றில் வைப்பிலிடுவதுடன், சேர்ந்து வருகின்ற வட்டிப் பணத்தொகையானது குறித்த ஊழியருக்குச் செலுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

ஊழியர்களுக்கான விதிமுறைகள்.

22. (1) கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் -

(அ) கூட்டுறவுச் சங்களின் ஊழியர் தரப்படுத்தல் வகுப்பு மற்றும் தரத்தை நிர்ணயித்தல், பதவியில் இணைத்துக் கொள்ளல், நியமித்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல், பதவி விலகல் மற்றும் பணி நிறைவு செய்வது தொடர்பாக ;

(ஆ) ஊழியர்களின் பணி தொடர்பான நடைமுறைகளையும் நிபந்தனைகளையும் குறித்துரைத்தல், சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயம் செய்தல் மற்றும் இதர கொடுப்பனவுகள், பணிக்கொடை, முற்பணம், விடுமுறை, ஒழுக்க நடவடிக்கை மற்றும் மேன்முறையீடு தொடர்பான அல்லது பணி நிர்ணயம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப ; மற்றும்

(இ) தேவைப்படும் எனக் கருதப்படும் வேறு விடயங்கள் தொடர்பாக, அமைச்சரால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(2) வட மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் ஊழியர்களும் இங்கு உப பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விதிக்கப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட வேண்டும்.

தனது ஊழியர் தொடர்பாக கூட்டுறவுச் சங்கத்தின் கடமைகள்.

23. அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் -

(அ) ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகவும் ஆணைக்குழுவால் உத்தரவிடக்கூடிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகவும் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் சம்பந்தப்பட்ட சகல விவரங்களையும் அவற்றில் உள்ளடக்க வேண்டும் ;

(ஆ) அந்தச் சங்க அலுவலகங்களின் உட்சென்று அங்கு வைக்கப்படும் புத்தகங்கள் கணக்கறிக்கை மற்றும் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் அவற்றின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு அல்லது அலுவலர் ஒருவருக்கு இடமளிக்க வேண்டும்.

24. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தொழில்தருநர் என்ற வகையில் தனது ஊழியர் சார்பில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

## பகுதி III

### ஆணையாளரின் அதிகாரங்கள்

*ஆணையாளர் சங்கத்தை தரப்படுத்த வேண்டும் மற்றும் ஊழியர்களை தீர்மானிக்க வேண்டும்.*

25. (1) கூட்டுறவுச் சங்கங்களை தரப்படுத்துவதற்காகவும் அந்தச் சங்கங்களின் ஊழியர்களின் தரத்தை மற்றும் வகுப்பை அத்துடன் ஒவ்வொரு தரத்திலான மற்றும் தரத்தில் இருக்க வேண்டிய ஊழியர்களின் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயிப்பதுடன் சம்பள அளவுத் திட்டத்தினை பொருத்துதல் மற்றும் தேவைப்படும் என தான் கருதும் விதத்தில் காலத்திற்கு காலம் மாற்றும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்க வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உப பிரிவின்படி ஆணையாளர் விதிக்கும் உத்தரவிற்கு முரணான விதத்தில் எந்தவொரு கூட்டுறவு சங்கமும் எந்தவொரு நபரையும் சேவையில் இணைத்துக் கொள்ளக்கூடாது.

*தகுதி சம்பள முறைமை போன்றவற்றுக்கு ஆணையாளர் சம்மதம் பெறல்.*

26. ஆணைக்குழு கூட்டுறவு சங்கங்களின் பதவி நியமனங்களுக்குத் தேவையான தகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு தரத்தில் அல்லது ஒரு வகுப்பில் ஒரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கான சம்பள அளவுத்திட்டங்களைக் நிர்ணயிப்பதற்கு அந்த சம்பள அளவுத் திட்டங்களைக் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதற்கு ஆணையாளரின் ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

## பகுதி IV

### நானாவிதங்கள்

*இடையூறுகளை அகற்றுதல்.*

27. இந்த நியதிச் சட்டத்தில் ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது ஏதாவது ஒரு விடயத்தையிட்டு பொருத்தமான அல்லது வலுவான ஏற்பாடுகள் நியதிச்சட்டத்தில் இல்லாத காரணத்தினால் சந்தேகம் அல்லது இடையூறு ஏற்படுமாயின் அமைச்சர் ஒரு கட்டளை பிறப்பிப்பதன் மூலம் அப்படியான சந்தேகத்தை அல்லது இடையூறுகளை நீக்கலாம் அல்லது தீர்க்கமாக முடிபு செய்யலாம். அப்படியான ஒரு கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்படல் வேண்டும். அடிப்படி பிரசுரிக்கப்பட்டதும் அவை சட்டவலு உள்ளதாக அமைவதோடு இந் நியதிச்சட்டத்திலுள்ள சட்ட ஏற்பாடுகள் போன்று செல்லுபடியான சட்ட வலு கொண்டதாக அமையும்.

*ஆணைக்குழு நிபந்தனைகளை ஆக்குதல்.*

28. (1) திட்டவட்டமாக வேறு விதமாக குறிப்பிடப்பட்டால் அன்றி இந்நியதிச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு தேவையானது எனக் கருதும் அப்படியான எல்லா விதிகளையும் ஆணைக்குழு உருவாக்கலாம் அல்லது அதில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஏதேனும் விடயங்களுக்காக அல்லது இந்த நியதிச்சட்டத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா விடங்கள் தொடர்பாகவும் அதன் என்னென்ன விடயங்களையிட்டு விதி அமைக்கலாம் என அதிகாரம் அளிக்கப்பட்டவை தொடர்பாகவும் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அல்லது தேவை எனக்கருதப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் எப்படி செயற்படுத்த வேண்டும் என்பது உள்ளடங்கலாக விதிகள் இயற்றலாம்.

(2) ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகளும் அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் வட மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) வட மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு சட்டப் பாதுகாப்பு.*

29. ஆணைக்குழு அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கத்தவறியதன் காரணமாக ஆணைக்குழுவின் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கு எதிராகவும் குடியியல் சட்டக் கோவையின் கீழ் அல்லது குற்றவியல் சட்ட கோவையின் கீழ் வழக்குத் தொடரவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ அல்லது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

30. இந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் எப்படி இருக்கின்ற போதிலும் ஒரு கூட்டுறவு சங்கம் அதன் திறமையான செயற்பாட்டிற்காக :-

(அ) ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு திறமைசாலியை சேவையில் இணைத்துக் கொள்ளலாம் ; இல்லாதுவிடின்

(ஆ) அமைய அல்லது நாளாந்த வேதன அடிப்படையில் அல்லது துண்டு வேலை அடிப்படையில் வேலைக்கு அமர்த்தலாம்.

எப்படி இருந்த போதிலும் அப்படியான ஊழியர்களுக்கு ஆணைக்குழுவின் அங்கீகரமின்றி சேவை நிரந்தரம் வழங்கப்படலாகாது.

தவறுகள்.

31. (1) ஏதாவது ஒரு கூட்டுறவுச் சங்க அல்லது எவராவது உத்தியோகத்தர் அல்லது ஊழியர், கீழ் குறிப்பிட்டவாறு,

(அ) எந்தச்சங்கமாவது அல்லது எவராவது இந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை மீறினால் ; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் அல்லது அதனால் முறைப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரால் செய்யப்படவேண்டும் எனக் கோரப்பட்ட எந்த ஒரு செயலையும் செய்வதற்கு அல்லது இந்த நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்காக தேவை எனக் கருதும் தகவல்களை கோரும் போது அவற்றை வழங்குவதற்கு எந்தச் சங்கமாவது அல்லது எவராவது வேண்டும் என்று அலட்சியம் செய்தால் அல்லது மறுத்தால் அல்லது தவறினால் ; அல்லது

(இ) எந்தச் சங்கமாவது அல்லது எவராவது வேணடுமென்று பொய்யான அறிக்கையைச் சமர்ப்பித்தால் அல்லது பொய்யான தகவலைக் கொடுத்தால் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவராவார்.

(2) ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அல்லது எவரொருவரும் உப பிரிவு 1 இல் தெரிவிக்கப்பட்ட விடயத்தையிட்டு எந்த அல்லது எவர் குற்றத்தைப் புரிந்தாலும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டால் ரூபா பத்தாயிரத்துக்கு விஞ்சாத அபராதப் பணத்தை செலுத்துவதற்கு பொறுப்பாளியாவார்.

(3) இந்த நியதிச் சட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏதாவது குற்றச் செயலைப் புரிந்தால் அச்சங்கத்தின் உத்தியோகத்தர் அதனைத் தன்னை அறியாமலே செய்யப்பட்ட குற்றச்செயல் என்று அல்லது தனது புத்திக்கு எட்டிய வகையில் அக்குற்றச்செயலைத் தடுப்பதற்குத் தேவையான எல்லாப் பிரயத்தனங்களையும் மேற்கொண்டதாக நிரூபித்தால் அன்றி அந்தச் சங்கத்தின் பொறுப்புவாய்ந்த சகல உத்தியோகத்தர்களும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படுவர்.

(4) ஆணைக்குழுவினால் ஒரு ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்குமாறு வழங்கப்பட்ட அப்படியான உத்தரவை கூட்டுறவுச் சங்கம் நிறைவேற்றத் தவறினால், சகல அல்லது ஏதாவது ஒரு இயக்குநர் சபை உறுப்பினரை நீக்குதல் உள்ளிட்ட சங்கத்திற்கு எதிரான பொருத்தமான நடவடிக்கைகளை ஆணையாளர் எடுத்தல் வேண்டும்.

32. ஒவ்வொரு நபரும் தனது கடமையை ஆற்றும் சந்தர்ப்பம் தவிர நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தானாகவோ அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ ஆணைக்குழுவின் ஏதாவது ஒரு தீர்மானத்தை அல்லது ஆணைக்குழுவின் ஏதாவது ஒரு அங்கத்தவர் மீது செல்வாக்கைப் பிரயோகித்தால் அல்லது பிரயோகிக்க எத்தனித்தால் குற்றம் இழைத்தவர் ஆவார். அத்தோடு நீதிபதி முன்னான சுருக்க விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா ஐயாயிரத்துக்கு மேற்படாத (5,000.00) அபராதத் தொகைக்கும் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கான சிறைவாசத்திற்கும் அல்லது இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

அனுமதியின்றி தகவல்களை வெளியிடல்.

33. ஆணைக்குழுவின் எந்த ஒரு அங்கத்தவராவது அல்லது ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் குழாமின் எந்த ஒரு அங்கத்தவராவது அல்லது வேறு எவராவது தமது கடமையின் போது அறியவந்த ஏதாவது ஆவணத்தின் உள்ளடக்கம், கடிதத் தொடர்பாடல் அல்லது தகவல் போன்ற யாதேனும் விடயங்களை தனது உத்தியோகபூர்வ கடமைகளை ஆற்றும்போது தவிர்ந்த வேறு எந்த சந்தர்ப்பத்திலும் வேறு எவருக்கும் வெளிப்படுத்தவோ அல்லது தெரிவிக்கவோ கூடாது.

ஆணைக்குழுவின் வாய்மூலக் குறிப்பு சலுகைகளுக்குட் பட்டது.

34. ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவின் எவராவது அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தருக்கும் ஏதாவது கூட்டுறவுச் சங்கம் அல்லது அப்படியான கூட்டுறவுச் சங்கத்தின் எவராவது ஒரு நிர்வாக சபை உறுப்பினர் அல்லது உத்தியோகத்தருக்குமிடையில் அல்லது ஆணைக்குழுவின் எந்த அங்கத்தவருக்கும் அல்லது ஆணைக்குழுவின் உத்தியோகத்தருக்குமிடையில் கடமை மேற்கொள்ளும்போது அல்லது கடமை தொடர்பில்

நடவடிக்கை மேற்கொள்ளும்போது ஏற்படும் கடிதத் தொடர்பாடல்கள் அல்லது உரையாடல்கள் எழுத்து மூலமானதோ அல்லது வாய்மொழி மூலமானதோ எதனையும் எந்தவொரு நபரும் ஏதாவது சட்ட நடவடிக்கையின்போது சமர்ப்பிப்பதற்கும் அல்லது வெளிப்படுத்துவதற்கும் தலைவரின் எழுத்து மூலமான சம்மதமின்றி அனுமதிக்கப்பட மாட்டார்.

*கூட்டுறவுச் சங்கம் மற்றும் இதன் ஊழியர்கள் தொழில் பிணக்குச் சட்டத்திற்கு ஏற்புடையவர்கள்.*

35. (1) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தொழில் நியாய சபை அச்சட்டத்தின் 31ஆ ஆம் பிரிவின் கீழ் ஓர் ஊழியரினால் ஏதேனும் விடயம் தொழில் நிவாரணத்திற்காக அல்லது பரிகாரத்திற்காக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றை அதே விடயம் அல்லது பொருளளவில் அத்தகைய தொடர்பில் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின் ஏற்றுக்கவனித்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது ஒரு ஊழியரினால் செய்யப்படும் ஏதேனும் விடயம் தொடர்பிலான மேன்முறையீட்டைக் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தொழில் நியாய சபைக்கு அச்சட்டத்தின் 31ஆ எனும் பிரிவின் கீழ் அதே விடயம் தொடர்பில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருப்பின் ஏற்றுக்கவனித்தல் ஆகாது.

*தெளிவின்மை தோன்றினால் தமிழ் மொழி மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

36. இந்த நியதிச் சட்டத்தில் தமிழ், சிங்களம் உரைகளுக்கிடையே முரண்பாடு தோன்றினால் தமிழ் மொழியே மேலோங்கி நிற்கும்.

*பொருள் கோடல்.*

37. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலொழிய இந்த நியதிச் சட்டத்தில்–

"அமைச்சர்" என்பது, வடக்கு மாகாண மாகாண சபையின் அமைச்சர் சபையில் இடம்பெற்றிருக்கும் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர்.

"ஆணைக்குழு" என்பது, வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு.

"ஆணையாளர்" என்பது, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களுக்கான சட்டத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு சங்கம்.

"மாகாணம்" என்பது, நிர்வாகத்தில் வட மாகாணம்.

"மாவட்டம்" என்பது, நிர்வாக மாவட்ட சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக மாவட்டம்.

"ஊழியர்" என்பது, வட மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றில் நியமனம் பெற்று சம்பளம் அல்லது கொடுப்பனவு ஊதியம் பெறும் நிரந்தர ஊழியர் என அர்த்தப்படுகிறது.

## அட்டவணை I

வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவரால்/உறுப்பினரால் வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டத்தில் 10(1) ஆம் பிரிவின்படி சத்தியப்பிரமாணம் செய்தல்/உறுதி மொழி வழங்கல்

வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக/உறுப்பினராக நியமனம் வழங்கப்பட்டுள்ள ........................................ ........................................................................................................ ஆகிய நான், எனக்கு வழங்கப்பட்டுள்ள வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவிக்கான கடமைகளைப் பக்தியுடனும், பக்கச்சார்பற்ற முறையிலும், மனித நேயத்துடனும், பகை உணர்வில்லாமலும், முழுமையாகவும் நேர்மையுடனும் நியாயமாகவும் நிறைவேற்றுவேன் என்றும், எனது கடமைகளை நிறைவேற்றும்போது மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கு உரித்தான கடமைகள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும், கடமையின் நிமித்தமின்றி, நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிடமாட்டேன் என நேர்மையுடனும் பயபக்தியுடனும் கூறிச் சத்தியப்பிரமாணம் செய்கின்றேன்/உறுதி மொழி வழங்குகின்றேன்.

...................................,
தலைவர்/உறுப்பினர்.

20................................................ ஆம் வருடம் ................................................ மாதம் ................................................ திகதி என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.

...................................,
மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி.

## அட்டவணை II

வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரால்/ஊழியரால் வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டத்தில் 10(2) ஆம் பிரிவின்படி சத்தியப்பிரமாணம் செய்தல்/உறுதி மொழி வழங்கல்

வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராக/ஊழியராக கூறப்பட்ட பதவியின் கடமைகளைச் செய்வதற்குப் பணிக்கப்பட்டுள்ள ..................................................................................................................................... ஆகிய நான், எனக்கு வழங்கப்பட்டுள்ள வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்/ஊழியர் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு எந்தவிதத்திலும் கூறப்பட்ட பதவியின் கடமை புரியும்போது நான் அறிந்து கொண்ட ஆவணங்களிலுள்ள, ஞாபகக் குறிப்புக்களிலுள்ள தகவல்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிட மாட்டேன் என நேர்மையுடனும் பயபக்தியுடனும் கூறிச் சத்தியப்பிரமாணம் செய்கின்றேன்/உறுதி மொழி வழங்குகின்றேன்.

.................................................
கையொப்பம்.

20................................................ ஆம் வருடம் ................................................ மாதம் ................................................ திகதி என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.

...................................,
தலைவர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாண சபை.

8-563

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.